பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.99 நாள்: 28.07.2016

**தியாகராயநகர் துரைசாமி சுரங்கப்பாதை, சேவை பாலத்தை மாண்புமிகு மேயர் அவர்களும், தியாகராயநகர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் ஆய்வு !**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களும், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்யநாராயணன் (எ) ப.சத்தியா அவர்களும் 26.07.2016 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, வார்டு–136க்குட்பட்ட தியாகராயநகர், துரைசாமி சுரங்கப்பாதை மேல் கட்டப்பட்டுள்ள சேவை பாலத்தை ஆய்வு செய்தார்கள்.

துரைசாமி சுரங்கப்பாதை 40 வருட பழமையானது. அதில் கிழக்கு பகுதியில் உள்ள அணுகு பாலம் 2.2மீ அகலம் கொண்டது. இதனால் இலகுரக வாகன உபயோகிப்பாளர்கள் மற்றும் பாதசாரிகள் அப்பகுதியை கடப்பதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள் என்று பொது மக்களால் புகார்கள் வரப்பெற்றதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களும், அப்போதைய தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மண்டலக்குழுத் தலைவர் அவர்களும் கடந்த ஆண்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தியாகராயநகர், துரைசாமி சுரங்கப்பாதையில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையினால் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் சாத்தியக்கூறுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் துரைசாமி சுரங்கப்பாதையின் கிழக்கு பகுதியில் முன்பிருந்த 2.2மீ அகலம் கொண்ட பாலத்தினை இடித்துவிட்டு, புதியதாக 5.6மீ அகலம் மற்றும் 9மீ நீளம் கொண்ட அணுகு பாலம் அமைக்க ரூ.17.28 இலட்சம் மதிப்பீட்டில் பணி தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

இந்த களஆய்வின் போது, இலகுரக வாகனங்கள் மட்டும் செல்வதற்கேற்ப உயரத்தடை 2.4மீ உயரத்தில் அமைக்கவும், ஜெனரேட்டர் அருகாமையில் உள்ள பகுதியினை சாலையின் உயரத்திற்கேற்ப சமன்படுத்தவும், தெருவின் பெயர் பலகையை உயர்த்தி புதிய பெயர் பலகை அமைக்கவும், பாலத்தின் கைப்பிடிச்சுவரில் உள்ள உடைந்த டைல்ஸ்களுக்கு பதிலாக புதிய டைல்ஸ்கள் அமைக்கும் பணி மற்றும் சுரங்கப்பாதைக்கு வர்ணம் பூசும் பணியும் மேற்கொள்ளவும் மாண்புமிகு மேயர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர். சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு.எல்.ஐ.சி. மாணிக்கம் அவர்கள், மாமன்ற உறுப்பினர் திரு. வீடியோ வி.சரவணன் அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**